

விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம், காரிமங்கலத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து மாற்றுத்திறனாளியிடம் இருந்து கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்டார். உடன் ஒன்றியப் பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றியச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், திருமயம் பள்ளிவாசல் தெருவில் 15வது நிதிக்குழு மானியத் திட்டம் 2023–24க் கீழ் ரூ.4.84 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலையினை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர், ஆக. 19 - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக அணிகளின் நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம் இன்று ( 19.08.2024 - திங்கட்கிழமை) காலை 11.00 மணியளவில் கவரைப் பேட்டை, டி.ஜெ.எஸ். லட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி எம்.எல்.ரவி எஸ்.ரமேஷ் முன்னிலை வகிக்கின்றனர். கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கி.வே. ஆனந்தகுமார் வரவேற்புரை. மாநில நிர்வாகிகள் க.சுந்தரம் இ.ஏ.பி.சிவாஜி சி.எச்.சேகர் ஜெ.மூர்த்தி கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் வெ.அன்புவாணன் ஜி.ஸ்டாலின் ஏ.ஆர்.டி. உதயசூரியன் பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி பா.செ.குண சேகரன் பி.வெங்கடாசலபதி கே.சுப்பிரமணி டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்கின்றனர். கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திர சேகர், பா.சுகுமாறன், எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ், நா.செல்வ சேகரன், ஆ.சத்திய வேலு, கா.சு.ஜெகதீசன், ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம் நகரச் செயலாளர் ஜி.ரவிகுமார், பேரூர் செயலாளர்கள் இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து க.சு.தமிழ்உதயன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்திற்கு வருகை தரும் அணிகளின் அமைப்பாளர்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் முன்னிட்டு அணிகள் சார்பில் நிகழ்ச்சிகள் நலத்திட்ட உதவிகள் நடத்திய தற்கான பிரசுரங்கள் அடங்கிய மினிட் புத்தகத்தை (நிகழ்வு குறிப்பேடு) அவசியம் கொண்டு வரவேண்டும் கீழ்க் குறிபிட்ட நாட்களில் அட்டவணைப்படி அணிகளின் நிர்வாகிகள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெறும்.

நாள்: 19.08.2024 திங்கட்கிழமை

காலை : 11.00 மணி இளைஞர் அணி, காலை : 11.30 மணி மாணவர் அணி, நண்பகல் : 12.00 மணி தகவல் தொழில் நுட்ப அணி, நண்பகல் : 12.30 மணி ஆதிதிராவிடர் நல அணி, நண்பகல் : 01.00 மணி விவசாய அணி, பிற்பகல் : 03.00 மணி மகளிர் அணி, பிற்பகல் : 03.30 மணி மகளிர் தொண்டர் அணி, மாலை : 04.00 மணி விவசாய தொழிலாளர் அணி.

நாள்: 20.08.2024 செவ்வாய்கிழமை

காலை : 10.00 மணி - அமைப்புசாரா ஓட்டுநர் அணி, காலை : 10.30 மணி- கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி, காலை : 11.00 மணி - பொறியாளர் அணி, காலை : 11.30 மணி - இலக்கிய அணி, நண்பகல் : 12.00 மணி - சிறுபான்மை நல உரிமை அணி, நண்பகல் : 12.30 மணி - நெசவாளர் அணி, நண்பகல் : 01.00 மணி - வர்த்தகர் அணி, பிற்பகல் : 03.00 மணி - மருத்துவ அணி, பிற்பகல்: : 03.30 மணி - விளையாட்டுமேம்பாட்டு அணி, மாலை : 04.00 மணி - சுற்றுச்சூழல் அணி, மாலை : 04.30 மணி - மீனவர் அணி, மாலை : 05.00 மணி - தொண்டர் அணி, மாலை : 05.30 மணி - தொழிலாளர் அணி, மாலை : 06.00 மணி - வழக்கறிஞர் அணி, மாலை : 06.30 மணி - அயலக அணி.

மேற்கண்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தவறாமல் ஆய்வுகூட்டத்தில் பங்கேற்கவேண்டுகிறேன்.

இவ்வாறு டி.ஜெ. கோவிந்தராஜன் அறிவித்துள்ளார்.

### வி.கே.வெங்கட்ராமன் தலைமையில்,

# அண்ணா கிராம ஒன்றியத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## டாக்டர் விஷ்ணு பிரசாத் எம்.பி. துவக்கி வைத்தார்!

கடலூர், ஆக. 19 - கடலூர் மாவட்டம் பண்ருட்டி தொகுதி அண்ணா கிராமம் ஒன்றியம் கோழிப்பாக்கம், பகண்டை, மாளிகை மேடு, கீழ் கவரப்பட்டு, மேல் கவரப்பட்டு, கொங்கராயனூர், பி.என். பாளையம் ஆகிய ஊராட்சி பகுதியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் அறிவுறுத்தலின் பேரில்,

பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து ஊரகப் பகுதிகளில் உள்ள பொது மக்களின் குறைகளை மனுக்களாக பெற்று ஆன்லைன் மூலம் உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் கோரிக்கை மனுக்கள் பெரும் முகாம் கோழிப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்தது.

முகாமிற்கு அண்ணா கிராம ஒன்றிய செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், ஆத்மா குழு தலைவர் வி. கே வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். பண்ருட்டி வட்டாட்சியர் ஆனந்த் ,அண்ணா கிராமம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவிச்சந்திரன், முருகன் முன்னிலை வகித்தனர்.

கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம் .கே .விஷ்ணு பிரசாத் ,அவர்கள் முகாமினை துவக்கி வைத்து நலத்திட்டங்களை வழங்கினார்.

இம் முகாமில் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மின்சாரத்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தூய்மை இந்தியா திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு இணையதள கணினி மூலம் பொதுமக்களின் மனுக்களை ஆன்லைனில் பதிவு செய்து தீர்வு காணப்பட்டது.

நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் பட்டாம்பாக்கம் ஜெயமூர்த்தி, தொரப்பாடி சுந்தரவடிவேல், மாவட்ட பிரதிநிதி ராமச்சந்திரன், அவைத் தலைவர் முத்து சங்கர், மாவட்ட பிரதி நிதிகள் ராமு ராமச்சந்திரன், புருஷோத்தமன் ,ராஜசேகர் ,துணை செயலாளர்கள் ராமர் ,உமையாள் ஆறுமுகம் , பொருளாளர் ஜி.கே. ஸ்ரீதர் ,

மாவட்ட அணி நிர்வாகிகள் கலியுல் ரகுமான், நரி மேடு செந்தில், ஏசுதாஸ், எழில்செல்வன் ,தகவல் தொழில் நுட்ப அணி ஞானவேல் , ,செயலாளர்கள் கருணா மூர்த்தி, தாமோதரன் ,சிவனேசன் ,அழகேசன் ,தினகர் ஒன்றிய கவுன்சிலர் குமரகுரு, அங்கீர் கனி, முருகன், தொரப்பாடி நகரதுணை செயலாளர் குணாளன்,பி என் பாளையம் மாளிகை மேடு பகண்டை மேல் கவர் பட்டு கீழ் கவரப் பட்டு கோழிப்பாக்கம் ஊராட்சியில் உள்ள கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், தருமபுரி தெற்கு ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி தருமபுரி மேற்கு மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன், தருமபுரி தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர்.எம். பிரபுராஜசேகர் ஆகியோரின் ஏற்பாட்டில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,கிருஷ்ணாபுரம் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி உரையாற்றினார்.



கடலூர் மேற்கு மாவட்டம் அண்ணா கிராமம் ஒன்றியம், கோழிப்பாக்கம் ஊராட்சியில் ,மக்களுடன் முதல்வர் திட்ட முகாம், ஆத்மா குழு தலைவர் ,ஒன்றிய கழக செயலாளர் வி .கே. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது. பண்ருட்டி வட்டாட்சியர் ஆனந்த் முன்னிலை வகித்தார், .கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம். கே. விஷ்ணு பிரசாத் முகாமை துவக்கி வைத்து நலத்திட்டங்களை வழங்கினார். இதில் கழகப் பொதுக்குழு உறுப்பினர்களின் என். பலராமன், உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முன்னிலை!

# சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ‘நான் முதல்வன்’ திட்ட கருத்தரங்கம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஆக.19 -**

**சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 16.08.2024 அன்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கல்வி நிறுவன தலைவர்களுடனான மாநில அளவிலான கருத்த ரங்கத்தை இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு தேவையான பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார். உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி இக் கருத்தரங்கத்திற்கு முன்னிலை வகித்தார்.**

இத்திட்டத்தின் துவக்கம் மற்றும் வெற்றிகரமான செயல்பாடு குறித்து இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறுகையில், தேசிய அளவில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்கல்வியில் தமிழ்நாடு அரசு புகுத்தியுள்ள புதுமையான திட்டங்கள் நாட்டில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் முன்னுதாரணமாக திகழ்கின்றன.

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தமிழ்நாடு மாபெரும் சாதனைகளைப் படைத்து வருகிறது. தொடக்கக் கல்வியில் தொடங்கி - உயர்கல்வி வரையிலும், காலை சிற்றுண்டித் திட்டம் - புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் மாதிரியான திட்டங்கள் நம் மாணவர்களின் கல்விக்கு துணை நின்று வருகின்றன. புதுமைப்பெண் திட்டம் வந்த பிறகு கல்லூரியில் மாணவிகளின் சேர்க்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

### மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!

ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் (Gross Enrollment Ratio) தமிழகம் முன்னிலை வகிக்கிறது. GER ஐ பொறுத்தவரை ஒட்டுமொத்த இந்திய நாடும் 50 சதவீதத்தை தாண்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கும் போது GERல் 100 சதவீதத்தை எட்டுவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. தேசிய உயர்கல்வி தரவரிசைப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிக அளவில் இடம்பிடித்துள்ளது.

குறிப்பாக அண்ணா பல்கலைக்கழகம் நம் நாட்டில் உள்ள தலைசிறந்த கல்வி நிறுவனமாக தேர்வு செய்யப் பட்டுள்ளது. நான் முதல்வன் திட்டம் எண்ணற்ற சாதனைகளைப் படைத்து வருகின்றது. முதலமைச்சரின் கனவுத் திட்டம் மட்டும் அல்ல இலட்சக் கணக்கான இளைஞர்களின் கனவை நிறைவேற்றும் திட்டமாக உயர்ந்து நிற்கிறது.

இத்திட்டத்தில் இதுவரை 31 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று உள்ளார்கள் என்றும், நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் ஒரு இலட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். நான் முதல்வன் திட்டம் எந்தத்திசையில் சென்று கொண்டிருக்கிறது.

### அதிக அளவில் வெற்றிகளை குவிக்க முடியும்!

இனி எந்தத் திசையில் சென்றால் இன்னும் அதிகமான வெற்றிகளை குவிக்க முடியும் என்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதே இந்தக் கருத்தரங்கம் நடைபெறுவதன் நோக்கம். வளாக வேலைவாய்ப்பில் கல்லூரிகளை நாடி வருவதற்கு இரண்டு அம்சங்கள் முக்கியமானவை.

திறன்மிக்க மாணவர்கள் இருக்க வேண்டும். இதற்காகத்தான் நான் முதல்வன் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள். Skill Lab, Skill Based syllabus coaching, College Ranking போன்ற தரவரிசையில் கல்லூரிகள் முன்னிலை வகிப்பதும் முக்கியம். நான்முதல்வன் திட்டத்தில் வழங்கபடும் திறன் பயிற்சி ஒரு கூட்டு முயற்சி என்பதும் மாணவர்கள், கல்லூரிகள், பேராசிரியர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

எனவே, நான் முதல்வன் எடுக்கும் அனைத்து முன்னெடுப்புகளிலும் கல்லூரிகள் பங்குபெற்று இத்திட்டத்தினை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கத்தில் பகிரப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இன்னும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் திறன் பெறுவதற்கு இத்திட்டத்தை மேலும் செழுமைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கல்லூரி நிர்வாகிகளுக்கு நான் முதல்வன் திட்டம் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கினார். உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டுமல்லாது வழங்கப்படும் கல்வித் தரத்திலும் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தினை தமிழ்நாட்டிற்கு அர்ப்பணித்துள்ளார் என்று கூறினார்.

மேலும், இக்கருத்தரங்கத்தில் உரையாற்றிய உயர்கல்வித்துறை செயலர் நான் முதல்வன் திட்டம் வேலைவாய்ப்பு பெறுவதற்கான சவால்களுக்கு தீர்வாக அமைந்துள்ளது என்றும் கல்லூரி நிர்வாகங்கள் இத்திட்டத்தின் நோக்கத்தினை புரிந்து கொண்டு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

சென்னை மண்டலத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளின் தலைமை நிர்வாகிகள் (தலைவர் / செயலாளர், முதல்வர்கள் மற்றும் SPOCகள்) அனைவரும் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கத்தில் நான் முதல்வன் திட்டம், அதன் நோக்கங்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்த முழுமையான விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில், அண்ணா பல்கலைக்கழகத்தின் 7 மண்டலங்களில் இருந்து 135 பொறியியல் கல்லூரிகளும், சென்னை மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகங்களில் இருந்து 230 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் பங்கேற்றன.

மேலும், இக்கூட்டத்தில் சிறப்பாக செயல்புரிந்த கல்லூரிகளுக்கு இரண்டு வகையான விருதுகள் வழங்கப்பட்டன.

1.மாணவர்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த கல்லூரிகள்

2.இத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை சிறந்த முறையில் நல்கும் கல்லூரிகளின் முகவர்கள் (SPOC)

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர். டாரேஸ் அகமது, தொழில்நுட்ப கல்வி இயக்கக ஆணையர் டி.ஆபிரகாம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா, கல்லூரிக் கல்வி இயக்குநர் செ.கார்மேகம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.



கரூரில் என் உயிரினும் மேலான.../. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் கரூர் மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, மாவட்டக் கழக ஒருங்கிணைப்பில் இளைஞர் அணி சார்பில் நடைபெற்றது.மேலிட பார்வையாளராக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணை செயலாளருமான கே. இ .பிரகாஷ், நடுவர்களாக கம்பம் செல்வேந்திரன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., குத்தாலம் அன்பழகன், பிரகதீஸ்வரன், ஆண்டாள் பிரியதர்ஷினி, செந்தில் வேல், ஆகியோர் பணியாற்றினர். இதில் மாவட்ட அவைத் தலைவர் டி.ராஜேந்திரன், எம்.எல்.ஏ.க்கள் இரா.மணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் பிரிவு இணைச் செயலாளர் முனவர் ஜான், மாவட்ட கழக நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, பாரத், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் வெங்கமேடு சக்திவேல், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, நகர, ஒன்றிய பேரூர் செயலாளர்கள் – நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இன்னாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக முத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.